

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கோவைபுதூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றி 11072 பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஈஸ்வரசாமி எம்.பி. மேயர் ரங்கநாயகி துணை மேயர் வெற்றி செல்வன், மாநில நிர்வாகிகள் இராஜீவ்காந்தி, அருன்குமார், C.R.ராமச்சந்திரன், ஏ.பி.நாகராஜ், சிந்து, ரவிச்சந்திரன்,முத்துசாமி, மாலதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், காட்டாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நூற்றாண்டு நினைவுத் தூணினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார். உடன் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தொல். திருமாவளவன், மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

### சங்கரன் கோவில் நகராட்சியில் அறிவு சார் மையம் –

# ரூ.200 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - முதல்வருக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் சங்கரன் கோவில் — ஈ.ராஜா பேச்சு!

சென்னை, ஏப். 9 –

சட்டப் பேரவையில் சங்கரன் கோவில் தொகுதி உறுப்பினர் ஈ.ரோஜா சட்டத்துறை மானியத்தில் பேசுகையில் சங்கரன் கோவிலுக்கு 200 கோடி ரூபாயில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி தெரிவித்து பேசினார்.



சட்டப் பேரவையில் சட்டத்துறை மானியக் கோரிக்கையில் சங்கரன் கோவில் தொகுதி ஈ.ராஜா பேசியதாவது:

தென்பொதிகை மலையின் தொன்மையும் தண்பொருநை ஆற்றின் நாகரிகமும் கொண்டு உருவான பாடலான பாளையங்கோட்டை சிறையினிலே, பாம்புகள், பல்லிகள் நடுவினிலே அஞ்சாமல் இருந்தவர் யாரு தலைவர் கலைஞர் பெயரினைப் பாரு (மேசையைத் தட்டும் ஒலி) என்றிருந்த சிறைச்சாலைகள் திராவிட மாடல் ஆட்சியில் சீர்திருத்தப் பள்ளியாக மாறியிருக்கிறது. இந்த பாடல் பட்டிதொட்டியும் ஒலித்த காரணத்தினால் தமிழ்நாட்டின் தலையெழுத்தை சிறையிலிருந்தே சீர்திருத்திய தலைவர் கலைஞர் அவர்களின் புதல்வர், ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தின் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். பள்ளி கல்லூரிகளில் விளையாட்டை விளையாடி அதோடு விட்டுச்செல்லும் வீரர்களின் சிந்தையில், விளையாண்டால் உன்னை தமிழ்நாடு அரசு தத்தெடுக்கும் எனும் தத்துவத்தை ஒவ்வொரு மாணவர் நெஞ்சிலும் வித்திட்ட எங்கள் சின்னவர், விளையாட்டு வீரர்களின் மாமன்னவர் துணை முதலமைச்சர் அவர்களை வணங்கி, வற்றாத ஜீவ நதியாய் அன்பை அளவில்லாமல் அள்ளித்தரும் அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அய்யா அவர்களையும் வணங்கி, தொகுதி சார்ந்த கோரிக்கைகளை அமைச்சர் பெருமக்களிடம் கொண்டு சென்று எனது தொகுதிக்கான திட்டங்களை வென்று தரும் எங்கள் பொறுப்பு அமைச்சர் அய்யா K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களையும் வணங்கி, கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனும் குறளுக்கு உவமையாக தான் கற்ற கல்வியின் ஆற்றலை சபையில் எங்களுக்கெல்லாம் கற்பித்துவரும் சபையின் நாயகர், ஆசிரியர் பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், கொறடா அவர்களையும் வணங்கி, அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை பெற்றெடுத்த தாய், தந்தையருக்கும், என்றும் நான் வணங்கும் சங்கரன்கோவில் தொகுதி மக்களுக்கும், என் பணிக்கெல்லாம் உற்ற துணையாக இருக்கும் என் மனைவி, மக்களுக்கும், மக்களின் கோரிக்கைகளை மனுக்களாக கொண்டு வந்து சேர்க்கும் எனது தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கும், வார்டு, கிளை கழகச் செயலாளர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டம் மற்றும் சிறைத் துறையின் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு உண்மையான ஜனநாயகம் சமூக பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் அரசியல் வாழ்க்கையில் அனைத்தும் சமத்துவம் நிலவுவதை உறுதி செய்கிறது. சட்டங்கள் இயற்றுவதைவிட அவற்றை நிறைவேற்று வதுதான் முக்கியமானது என்று அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் தாமஸ் ஜெபர்சன் கூறியதைப்போல இயற்றிய சட்டங்களை எல்லாம் இரும்புக்கரம் கொண்டு நிறைவேற்றி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள். பிற துறைகளைப்போல் சிறைத் துறையின் நேரடியாக அத்துறையின் செயல்பாடுகளைக் காணமுடியாத போதிலும், நான் ஒரு வழக்கறிஞர் என்பதால் சிறை சென்று வரும் சிலரது அனுபவங்களைக் கேட்டவன் என்ற முறையில் இங்கு பேச விரும்புகிறேன்.

**சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு!**

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்க நம்முடைய அரசு கல்விக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது. எந்த அளவு என்றால் 100 சதவிகிதம். இன்று தமிழ்நாட்டில் எவ்வாறு இடைநிறுத்தம் இல்லாமல் 100 சதவிகிதம் பள்ளிக் கல்வித் துறை செயல்படுகிறதோ, அதைத்தான் இன்று சிறைத் துறை சிறைவாசிகளுக்கும் கல்வியறிவினை அளிக்க தமிழக அரசும், மனிதவள மேம்பாட்டுத் துறையும் இணைந்து பல திட்டங்களை வகுக்கிறது. சிறைவாசிகளைச் சீர்திருத்தும் பொருட்டு இலவசக் கல்வி, ஆரம்பக் கல்வி, தொடக்கக் கல்வி என்று இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் போன்றவையும் அங்கு நிறைவேற்றப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் அங்கு சிறை நூலகங்கள், அரசு தொழிற்பயிற்சி நிலையம், இன்றைக்கு தொழிற்பயிற்சி மூலமாக சிறைவாசிகள் வெளியே சென்றால் அவர்கள் சுயமாக வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக, சிறைவாசிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த இந்தப் பயிற்சிகள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

விடுதலைக்குப்பின் சுயமாக தோட்டக்கலை, விவசாயம், உரம் உற்பத்தி செய்வதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்ல சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம். சிறை சந்தைகள், உணவகங்கள், petrol bunk ஆகியவற்றின் மூலமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கக்கூடிய நிகழ்வும் நடைபெற்று கொண்டிருக்கிறது. அதோடு சிறைவாசிகளுக்காக கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களுடைய மனதினை மேம்படுத்தக்கூடிய திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

நம்முடைய மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் கல்விச் சேர்க்கையானது இயக்குநரகம் மூலமாகத்தான் நடைபெறுகிறது. ஆனால், சட்டக் கல்வித் துறையில் மட்டும் VC (ViceChancellor) மூலமாக மட்டும்தான் சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கிறது. ஆகவே, சட்டக் கல்வியையும் சட்ட இயக்குனர் மூலமாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தொடர்ந்து நம்முடைய திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், அதேபோல விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் கூடுதல் சார்பு நீதிமன்றமும் அமைத்துத் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலநீலிதநல்லூரில் அய்யா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை டாக்டர் கலைஞர் அவர்கள் நிறுவினார்கள். ஆனால், அக்கோரிக்கையை முன்னெடுத்து, செயல்படுத்திய அய்யா மூக்கையா தேவர் அவர்களுக்கு மணிமண்டபம் அறிவித்த முதல்வர் அவர்களுக்கு தொகுதி சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுமார் 32 ஆண்டுக் காலமாக எந்தவித வளர்ச்சியும் இன்றி இருந்த சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியை கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் எனது சங்கரன்கோவில் தொகுதிக்கு கிடைக்கப்பெற்ற முத்தான திட்டங்களில் சிலவற்றை இங்கு முத்திரைப் பதிக்க விரும்பு கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதியில் 11.33 கோடி மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்பட்டு, செயல்பட்டு கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்!**

அதேபோல சங்கரன்கோவில் நகராட்சியில், அறிவுசார் மையத்தில் தொடங்கி, தினசரி நாளங்காடி முதல்வர் அவர்கள் தலைமையில் திறக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. அதேபோல நகரப் பகுதியில் 200 கோடி ரூபாய்க்குமேல் கூட்டுக் குடிநீர் திட்டம். ஏனென்றால், ஒரு காலத்தில் சங்கரன்கோவில் பெண் கொடுப்பதற்கு தயங்கிய காலம் சென்று, தலைவர் கலைஞர் அவர்களால் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் விரிவாக்கம் செய்யப்பட்டு, இன்று நகரப் பகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி தந்த நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல புதிய பேருந்து நிலையம். 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, வருகின்ற 13 ஆம் தேதியன்று நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் K.K.S.R. இராமச்சந்திரன் அவர்களும் திறந்து வைக்க வருகை தர இருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிவுத்துறை அலுவலகக் கட்டிடம்! அதேபோல ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக சமுதாய நலக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கும் திறப்பு விழா நடைபெறவிருக்கிறது. மாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் கட்டப்பட்டு, அதுவும் தற்போது பயன்பாட்டில் இருக்கின்றது. நகரப் பகுதியில் அதிகமாக வாடகைக் கட்டடத்தில் இருந்த, கடந்த காலங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பத்திரப் பதிவுத் துறை அலுவலகம்.

பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதேபோல வணிக வரி அலுவலகமும் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. தலைவர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்து வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த தீயணைப்பு நிலையத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலே முதல்முறையாக அரசு கலைக் கல்லூரியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தட்டச்சுப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுகாதாரத் துறை. சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு செல்லவேண்டுமென்றால் திருநெல்வேலிக்குதான் செல்ல வேண்டும். தற்போது அப்படி இல்லை. ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனையில் மேம்படுத்தப்பட்ட கட்டடங்கள், 2.47 கோடி மதிப்பீட்டில் CT Scan மையம், 12 இலட்சம் மதிப்பீட்டில் ஒளிபுகா கட்டடம், நவீன சலவை இயந்திரக்கூடம், digital Xray, கர்ப்பவாய் புற்றுநோய் கண்டறியும் கருவி, காசநோய் கண்டறியும் மையம், மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் வசதி என மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக இன்று சங்கரன்கோவில் மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், சாயமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதனையும் சாதனையாக நான் இங்கே எடுத்துரைக்கிறேன்.

அதேபோல், சங்கரன்கோவில் என்பது ஒரு கோயில் நகரம். இந்து சமய அறநிலையத் துறை மூலமாக 15 ஆண்டுகளாக பழுது பார்க்காமல் இருந்த தங்கரதம் இன்றைக்கு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. கோயில் யானை கோமதிக்கு புதிய நீச்சல் குளம் அமைக்கப்பட்டிருக்கிறது. சங்கரன்கோவில் தொகுதியில் வணிக வளாகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், ஆயிரம் ஆண்டு சிறப்பு வாய்ந்த சங்கரன்கோவில் திருக்கோயிலுக்கு தமிழ்நாடு அரசுமூலம் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. அதில் பெரும் பங்கு வகித்தது நம்முடைய வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி அவர்கள் அதிகமான அளவுக்கு நிதியைக் கொடுத்திருக்கிறார். உபயதாரர்களும் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் முழுமையாக இருந்து, சிறப்பு செய்திருக்கிறார். அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கரன்கோவிலில் இன்னும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், தொகுதி கோரிக்கையாக சங்கரன்கோவில் பகுதியில் குருவிகுளம் ஒன்றியம், சாயமலைப் பகுதியில் அமைந்திருக்கும் உம்மையொருபாக ஈஸ்வரர் திருக்கோயிலில் பாலாலயம் செய்வதற்கு பணிகள் துவங்கப்பட்டு குடமுழுக்கு இன்னும் நடைபெறாமல் உள்ளது. எனவே, கொடையாளர்கள்மூலம் விரைந்து குடமுழுக்கு நடத்த அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சங்கரன்கோவில் காவல் உட்கோட்டத்தில் 11 காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்கள் பயன்பெரும்வகையில் புதிய காவலர் குடியிருப்பு அமைத்திட வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமரம் மஜாரா ஊராட்சி சுமார் 8,500 வாக்காளர்கள் உள்ளனர். .

சங்கரன்கோவில் தொகுதி வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களைத் தந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், துறை ரீதியாக திட்டங்களை வழங்கிய கே.என். நேரு அவர்களுக்கும், எங்களுடைய பொறுப்பு அமைச்சருக்கும் நன்றிகளைத் தெரிவித்து, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்னும் தாரக மந்திரத்தோடு தமிழ்நாட்டினை இந்திய ஒன்றியத்தின் முதன்மை மாநிலமாக மாற்றி வரும் திராவிட மாடல் நாயகர் தளபதியாரின் வழியில் ”நமது முயற்சி சங்கையின் வளர்ச்சி என்னும் நோக்கத்தோடு சங்கரன் கோவில் சட்டமன்ற தொகுதியின் வளர்ச்சிப் பணிகளில், தொகுதி மக்களின் தும்பியாய் எங்களை வழி நடத்தும் சின்னவரின் தம்பியாய் எனது உரையை நன்றியோடு நிறைவு செய்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

சங்கரன்கோவில் மாவட்டத்திற்கு, மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் மற்றும் தொடக்கக் கல்வி மாவட்டக் கல்வி அலுவலகம் மீண்டும் அமைத்திட வேண்டும். சங்கரன்கோவில் தொகுதியில் மாவட்ட பத்திர பதிவு அலுவலகம் அமைத்திட வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுகலை பாடப் பிரிவுகளான M.Com மற்றும் M.Sc கம்ப்யூட்டர் மற்றும் இளங்கலை தமிழ் பாடப்பிரிவு ஏற்படுத்தித் தர வேண்டும்.

அம்பாசமுத்திரம் முதல் முக்கூடல் வழியாக சங்கரன்கோவில் வரை புதிய கால்வாய் திட்டம் அமைத்திட வேண்டும். சங்கரன்கோவில் தொகுதியில் குடிநீர் வடிகால் வாரிய கோட்ட அலுவலகம் அமைத்திட வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதியில் வீட்டு வசதி வாரியம்மூலம் குடியிருப்பு வீடுகள் கட்டி தரப்பட வேண்டும். சங்கரன்கோவிலிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு அரசு பேருந்து வசதி ஏற்படுத்த வேண்டும்.

தென்காசியில் இணை இயக்குநர் அலுவலகமும், சங்கரன்கோவிலை தலைமையிடமாக் கொண்டு கால்நடை உதவி இயக்குநர் அலுவலகமும் அமைத்திட வேண்டும். சங்கரன்கோவில் தொகுதியில் கால்நடை மருத்துவமனையினை பல்நோக்கு கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தி தர வேண்டும்.

சங்கரன்கோவில் பகுதியில் ESI மருத்துவமனைக்கு சொந்த கட்டடம் அமைத்து தர வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு மருத்துவமனை அருகிலேயே மகப்பேறு மருத்துவமனை (சீமாங்க் சென்டர்) அமைத்திட வேண்டும். குருவிகுளம் பகுதியை மையமாகக் கொண்டு அரசு கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதியில் சிப்காட் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து புதிய தொழிற்சாலைகள் அமைய வழிவகை செய்ய வேண்டும். சங்கரன்கோவில் தொகுதியில், தேர் உலாவும் நான்கு ரத வீதிகளிலும் புதைதள மின் கம்பிகள் அமைத்திட வேண்டும்.

மேலநீலிதநல்லூர் ஒன்றியம், வென்றிலிங்கபுரம் மேல்நிலைப் பள்ளி மற்றும் குருவிகுளம் ஒன்றியம் செவல்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியினையும் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி தர வேண்டும்.

மேலநீலிதநல்லூர் ஒன்றியம் கடையாலுருட்டி கிராமத்திற்கு தனி கிராம நிர்வாக அலுவலரும், தனி வருவாய் அலுவலரும் நியமனம் செய்ய வேண்டும்.

சேந்தமரம் மஜாரா இணை இரண்டாக பிரித்து கடையாலுருட்டி ஊராட்சி, வேலப்பன்நாடாரூர் ஊராட்சி என அறிவித்திட வேண்டும்.

இவ்வாறு ஈ.ராஜா பேசினார்.

### ஜி.டி.எம்.கார்த்திக் ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் பி.ஜெ.மூர்த்தி தலைமையில்

# பெரியபாளையத்தில் நீர் மோர் தண்ணீர் பந்தல்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திறந்து வைத்தார்!

*திருவள்ளூர் ஏப். 9-*

*பெரியபாளையத்தில் நீர் மோர் பந்தலை மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் ராஜ் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்.மோர் வழங்கினார். திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஜி.டி.எம் கார்த்திக் ஏற்பாட்டில் பெரியபாளையம் பஜாரில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பி.ஜெ.மூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட அவை தலைவர் பகலவன், முன்னாள் எம்எல்ஏ சிஎச்.சேகர், பொதுக்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ்,*

*மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் அமைப்பாளர் வி.பி. ரவிக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய அவைத் தலைவர் ரவிச்சந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர், மோர், தர்பூசணி, பனை நுங்கு, இளநீர், வெள்ளரி,திராட்சை,உள்ளிட்ட பல வகைகள், மற்றும் குளிர் பானங்கள் வழங்கினார்.*

*இதில் நிர்வாகிகள் பா.து. தமிழரசன், ரவி, முகமது மொய்தீன், வழக்கறிஞர்கள் சீனிவாசன், முனுசாமி அப்புன் ,சுமன், சம்பத் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் பலர் கலந்து கொண்டனர்.*



திருப்பூர் வடக்கு மாவட்ட மாநகர கழகத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர், வேலம்பாளையம் சாலையில் அமைந்துள்ள வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் தலைமையில் திருப்பூர் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, துணை செயலாளர் ராமசாமி, பொருளாளர் அ.சரவணக்குமார், வட்டக் கழக செயலாளர்கள் சண்முகசுந்தரம், செந்தில்குமார் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் .



தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பிஜேபி அரசைக் கண்டித்து நன்னிலம் சட்டமன்ற தொகுதி குடவசல் மஞ்சக்குடியில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன்,எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் க. தன்ராஜ், தேர்தல் பணிக்குழு செயலாளர் முன்னாள் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, தேர்தல் பொறுப்பாளர் ஜெகவீர பாண்டியன், , குத்தாலம் கல்யாணம், தலைமை கழக பேச்சாளர் வீ.வேல்முருகன், ஒன்றிய கழக செயலாளர்கள் வீ. அன்பரசன், எஸ்.ஜோதி ராமன் ப.பிரபாகரன், கோ. தெட்சிணாமூர்த்தி,சேகர்.கலியபெருமாள், வே. மனோகரன் கேட்டன் எம். செல்வராஜ், நகர செயலாளர்கள் ஏ.கே.டி. சேரன், பா.சிவனேசன் பக்கிரி சாமி இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாகபங்கேற்றனர்.



வடகோவையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனைகள் வழங்கினார். வடக்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ரதி மனோகர் முன்னிலையில் நடைபெற்ற அறிமுக கூட்டத்தில் மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ரதி ராஜேந்திரன், சரோஜினி, அமிர்த வள்ளி, ஷர்மிளா, தேவகி, பிரியா,மற்றும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.